யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible] நூலகம்:

# ★ விடுதலைப் புலிகளை இலங்கை அரசு தடைசெய்யாது!

## அமைச்சர் கதிர்காமர்

(கொளும்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்யும் எண்ணம் அரசுக்கு இல்லை என வெளியுறவு அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் இதனை தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்: தற்போதைக்கு விடுதலைப் புலிகளுடன் சமாதான பேச்சுக்கள் நடாத்தவோ, மத்தியஸ்தத்திற்கோ வாய்ப்பேதும் இல்லை

(5ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5. 00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 08 இதழ் 138
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 22 - 6 - 1995

## பெரும் போருக்கு அரசு தயாராகிறது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக பெரும் போரை நடாத்த அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

வெளிநாடுகளிலிருந்து பெருமளவு ஆயுதங்களை அரசு குவித்து வருவதுடன் படைகளுக்கு ஆட்களைச்சேர்க்கும் முயற்சிகளிலும் அரசு தீவிரமாக இறங்கியுள்ளது.

மேலும் பாதுகாப்பு வரி அதிகரிப்பு, கட்டாய பாது

(5-ம் பக்கம் பார்க்க)

# ★ இலங்கையில்

# சமாதான முயற்சிக்கு இந்தியா முட்டுக்கட்டை போடுகிறது

## நாடாளுமன்றில் 'ஹமீத்' குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முட்டுக்கட்டையாக இந்தியா இருந்து வருவதாக முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் நாடாளுமன்றில் குற்றம் சாட்டியுள்ளார்.

பாதுகாப்புவரி திருத்தசட்ட மூலம் குறித்து நாடாளுமன்றில் நேற்று முன் தினம் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாப் ஹமீத் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்:

அரசுக்கும்-விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்தவுடன் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனையும் அவர் சகாக்களையும் இந்தியா தன்னிடம் ஒப்படைக்கும்படி இலங்கை அரசிடம்கோரிக்கைவிடுத்ததே புலிகளின் அண்மைக்கால அதிரடித்தாக்குதல்கள் அதிக

(5ம் பக்கம் பார்க்க)

சப்புகஸ்கந்தவில்

## நீர்த்தாங்கி அருகே வெடிகுண்டு மீட்பு

(கொழும்பு)

சப்புகஸ்கந்த நீர்த்தாங்கி அருகே வெடிப்பதற்கு வைக்கப்பட்டிருந்த 12 கிலோ நிறையுடைய குண்டு கண்டுபிடிக்கப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நீர்விநியோக தாங்கியருகில் பாலத்திற்கு கீழே இக் குண்டு வைக்கப்பட்டிருந்தது. குண்டு கண்டுபிடிக்கப் பட்டதையடுத்து உடனடியாகவே அது செயலிழக்கச்செய்யப்பட்டது.

[5-ம் பக்கம் பார்க்க]

## சர்வதேச ஆயுத உதவியை இலங்கை அரசு நாடுகிறது

(கொழும்பு)

"விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போராடுவதற்கு மேற்கத்திய நாடுகளிடமிருந்து இலங்கை ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ளது." என்று வெளியுறவு அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று, கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

அமைச்சர் கதிர்காமர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்: முன்னர் இலங்கை மீது ஆயுதத் தடை விதித்திருந்த மேற்கத்திய நாடுகள் தற்போது இலங்கை அரசுக்கு ஆயுதங்களை வழங்க முன்வந்துள்ளன.

பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து ஆகிய ஐரோப்பிய நாடுகள் தற்போது ஆயுதங்களை வழங்க முன்வந்துள்ளன என்றும் கூறினர்.

(5-ம் பக்கம் பார்க்க)

## வழிப்பறிக் கொள்ளையர் காவல்துறையால் கைது

### ஒருவர் பொறியியல் மாணவன்

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் பகுதியில்நேற்று முன்தினம் வழிப்பறிக் கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட குழு ஒன்று பொதுமக்களின் உதவியுடன் காவல்துறையினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டது. இக்கொள்ளைக் கோஷ்டியில் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல்பீட மாணவன் ஒருவரும் அடங்குவார்.

காவல்துறையினரால் கைது

[5ம் பக்கம் பார்க்க]

## பூநகரியில் முன்னேறி வந்த படையினரை,புலிகள் விரட்டியடித்தனர்

[யாழ்ப்பாணம்]

பூநகரி சங்குப்பிட்டி பகுதியில முன்னேறி வந்து தரித்து நின்ற இராணுவ அணியொன்றை விடுதலைப் புலிகள் தாக்கி பழைய நிலைக்கு விரட்டியடித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றது. பூநகரி -சங்குப்பிட்டி முகாமில் இருந்து 700 மீற்றர் தூரம் முன்னேறி வந்து தரித்துநின்ற இராணுவ அணியொன்றின் மீது இரவு 8-30 மணியளவில் விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை தொடுத்தனர்.

15 நிமிட நேர கடும் மோதலின் பின் இராணுவத்தினர் இழப்புகளுடன் முகாமுக்கு தப்பி ஓடினர்.

(6ம் பக்கம் பார்க்க)

பத்திரிகைச் செய்தி:

## யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மறுப்பு

[யாழ்ப்பாணம்]

மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் குழு எனப்படும் அமைப்பிற்கும் தங்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லையென "யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கையொன்றினை விடுத்துள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கொழும்பிலிருந்து வெளியாகும் சில பத்திரிகைகளும்

(5-ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸ் அரசிலிருந்து வெளியேறாது

(கொழும்பு)

தற்போதைய அரசிலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் விலகாதென்று முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான அமைச்சர் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அரசாங்கத்திலிருந்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெளியேறிவிடும் என்று சிலர் எதிர் பார்க்கிருகள்.

(5ம் பக்கம் பார்க்க)

## இரு மாத காலப் போரில 481 படையினர் உயிரிழப்பு!

[யாழ்ப்பாணம்]

மூன்றும் ஈழப்போர் ஆரம்பமாகி கடந்த 19ம் திகதியுடன் முடிவடைந்த இரண்டு மாதங்களில் குறைந்தது 481 படையினர் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர், நூற்றுக் கணக்கானோர்படுகாயமடைந்தனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது: புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட ஒருவர் லெப்டினன் கேணல், ஐவர் விமானப்படை விங் கொமாண்டர்கள். இந்த இரண்டு மாதங்களில் இரு கடற்படைக் கப்பல்கள் அழிக்கப்பட்டன. இரண்டு அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. இரு இராணுவ

(5ம் பக்கம் பாக்க)

## வரி விளம்பரம்


### புலமைப் பரிசில்

ஆண்டு - 5 புலமைப் பரிசில் தேர்வுக்கான வினைப் பத்திரம் 1, வினுப் பத்திரம் 2 க்குரிய ''பொது விவேகம், பொதறிவு'' வெளிவந்துவிட்டது. வெளியீடு: சுப்பிரமணிய புத்தகசாலை - யாழ்ப்பாணம். (ஏ-5027)


# பாதுகாப்பு வரிக்கு நாடாளுமன்றில் எதிர்ப்பு

(கொழும்பு)
தவி கூட்டணி பாதுகாப்பு வரிக்கு நாடளுமன்றத்தில் எதிர்ப்பு தெரிவித்தது.

அமைச்சர்பீரிஸ் இது பற்றி கருத்து வெளியிடுகையில் இறைமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஏற்பட்டுள்ள சவாலை முறியடிக்கவே பாதுகாப்புவரி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்.

பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்ட பணம் தகுந்தமுறையில் பயன் படுத்தப் படவேண்டும் என்று ஹரோல்ட் ஹேரத் தெரிவித்தார். -ரி

## கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)
நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலயத்தில் கடந்த 10நாட்களாக 'திருவிளையாடல் புராணம்' தொடர் சொற் பொழிவு நிகழ்த்திய குமாரசாமி ஐயர் இன்று வியாழக்கிழமை பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளார்.

இவ் ஆலயத்தல் நடைபெற்று வரும் கும்பாபிஷேக வைபவத்தை யொட்டி இத் தொடர் சொற்பொழிவு இடம் பெற்றுவந்தது. க-சி

## ஏற்பு தடுப்பு ஊசி விநியோகம்

(பண்டத்தரிப்பு)
தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலைக்கு ஏற்பு நோய்த்தடுப்பு ஊசி மருந்து யாழ். சுகாதார திணைக்கள மாவட்ட மருந்து களஞ்சியப் பகுதியினரால் கடந்த வாரம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இதனை அடுத்து மானிப்பாய் திருக்குடும்ப கன்னியர் மட கட்டத்தில் இயங்கிவரும் மேற்படி வைத்தியசாலை வெளி நோயாளர் சிகிச்சை நிலையத்தில் ஏற்பு ஊசி தற்போது போடப்பட்டு வருவதாக அறியப்படுகின்றது. 72

# தமிழகத்தில் முக்கிய புலி வீரர்கள் ஊடுருவல்

(சென்னை)
முக்கியமான விடுதலைப் புலி வீரர்கள் தமிழ் நாட்டினுள் ஊடுருவி இருக்கிறர்கள் என்று திரு. வாழபபாடி ராமமூர்த்தி தெரிவித்தள்ளார்.

சிலதினங்களுக்கு முன்னரீ காலமான தமிழக தலைவர் பெரும் சித்திரனுருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக விடுதலைப்புலிகளின் உளவுப்பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான் உட்பட இரு உயர் தலைவர்கள் கடந்த வாரம் தமிழகம் வந்திருந்தார்கள் என்றும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். ரி

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**22-06-1995**

வியாழன் இரவு

08.02 சொல்லுங்கள் பார்க்கலாம்
8.10 நோய்தீர்க்கும் மூலிகைகள்
8,20 உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் 'காரணம் புரிந்தபோது' குறு நாடகம்
8.30 செய்திகள்
8 40 மொழியும் வாழ்வும்
8 50 எங்கள் தேசம்

**23-06- 1995**

வெள்ளி காலை

7,02 மாவீரர் வணக்கம்
7.15 மணியாரம்
7.30 செய்திகள்
7.35 பத்திரிகைச் செய்திகள்
7.45 தாயகப் பாடல்கள்

யாழ். வைத்தியசாலையில்

# தொற்றுநீக்கும் பிரிவு மீண்டும் செயற்படுகிறது

(யாழ்ப்பாணம்)
யாழ். போதனு வைத்தியசாலை தொற்று நீக்கும் பிரிவில் கடந்த எட்டு வருடங்களுக்கு மேல் பழுதடைந்து இயங்காது இருந்த தொற்று நீக்கும் இயந்திரம் மீண்டும் இயங்க வைக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவில் இருந்து நான்கு தொற்று நீக்கும் இயந்திரங்களில் மூன்று கருவிகள் பழுதடைந்து பல பொறியிலாளர்களாலும் திருத்த வேலைகள் முயற்சி மேற்கொள்ளப்பட்டும் திருத்தமுடியாது கைவிடப்பட்டு எஞ்சிய ஒரு தொற்று அகற்றும் இயந்திரத்துடனேயே இப்பிரிவு கடந்த சில ஆண்டுகளாக இயங்கி வந்தது.

இவ்வேளை பிரிட்டிஷ் அரசின் அன்பளிப்பாக கிடைத்த ஒரு தொற்று நீக்கும் இயந்திரமும் இயங்கத்தொடங்கி ஒரு மாதத்தில் பழுதடைந்தது. அதனைத்தொடர்ந்து எஞ்சியிருந்த பழைய ஒரே ஒரு தொற்று நீக்கும் இயந்திரம் கடந்த வாரம் பழுதடைந்து தொற்று நீக்கும் பிரிவே செயலிழந்திருந்தது தெரிந்ததே.

இந்த ஆபத்தை விடுவிக்க நிர்வாகத்தின் அவசர செயற்பாட்டில் இந்த இயந்திரம் மீண்டும் இயங்க தொடங்கியது குறிப்பிடத்தக்கது. 90-ரி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**22-06-1995**

வியாழன்மாலை

5 01 சிந்தனைச் சிதறல்
5.02 எழுச்சி கீதம்
5.10 புதியவை
5.15 மழலைகளுக்காக
5,30 இசையும் கதையும்
6 00 சிந்தனைக்குச் சிலவிநாடிகள்
6.02 பொன்விளையும் பூமி
6,15 விளையாட்டுச செய்திகள் தொடர்ந்து கேள்வி பதில்
6.30 நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.


UNIVERSITY OF JAFFNA

**Tender Notice**

Sealed tenders are invited from contractors registered for civil Engineering works with ICTAD for the "Painting 75,000 gallons elevated water tank".

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna until 28-06-95 on producing a receipt from Bursar, University of Jaffna for the following tender fee.

1. Refundable — Rs. 1000/-
2. Non-refundable — Rs. 200/-

Tenders should be sent to reach Registrar, University of Jaffna not later than 10-00 a. m. on 11-07-95.

Tender forms can be inspected free of charge at Maintenance Branch, University of Jaffna during office hours.

**Registrar.**

University of Jaffna,
P. O. Box 57,
Jaffna.

(A-5024)


# சுகாதார ஊழியருக்கு பயிற்சி வழங்க முடிவு

(கொழும்பு)
சுகாதாரத் துறையில் மேலும் பல ஊழியர்களுக்கு பயிறசி வழங்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக சுகாதார நெடுஞ்சாலைகள், சமூக சேவைகள் அமைச்சர் எம். எச். எம். பௌசி தெரிவித்திருக்கிறர்.

அரச வைத்தியசாலைகளில் பயிற்சி பெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்கும், தாதிமார் மற்றும் ஊழியர்களுக்கும் பற்ருக்குறை நிலவி வருவதையடுத்தே இம் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

இதன் பொருட்டு பயிற்சி நிலையங்களை மேலதிகமாக அமைக்கவும் நடவடிக்கையெடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் பௌசி தெரிவித்திருக்கிறர்.

துணை வைத்திய சேவையின் பெரும்பாலான பிரிவுகளுக்குரிய பயிற்சிகள் தற்பொழுது கொழும்பு போதனு வைத்தியசாலையில் வழங்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. -கி

## இராசி பலன்

**22-06-1995**

வியாழக்கிழமை

[தமிழுக்கு ஆனி—08]

தசமி; முன்னிரவு 10-09 வரை, ரேவதி; முற்பகல் 9-00 வரை, சித்தாமிர்த யோகம், இராகுகாலம்: பிற்பகல் 1-24 முதல் 2-54 வரை, சுபவேளை: காலை 7-24 முதல் 8-54வரை.

மேடம்: கௌரவம். காரியச் சிறப்பு, தொழில் சிறப்பு.
இடபம்: மன வேதனை, அதிகாரிகள் சினம், அலைச்சல்.
மிதுனம்: முரண்டு பிடித்தல், கடின வேலை, சுப விரயம்.
கடகம்: குடும்ப நன்மை, பிறர் தயவு, பண வரவு.
சிங்கம்: நண்பர் கவலை, தொழில் நஷ்டம், கடன் சுமை.
கன்னி: உடல் உபாதை, அநாவசியசந்தேகம், வெறுப்பு
துலாம்: பிதாவழி உறவு, பிடிவாதம், முயற்சி பலிதம்.
விருச்சிகம்; அதிக பொறுப்பு பிரார்த்தனை, ஆடம்பரச் செலவு.
தனுசு: பகைவரால் கஷ்டம், மனப் பயம், யோசனை.
மகரம்: பயண அனுகூலம், குடும்ப சந்தோஷம், புதிய முதலீடு.
கும்பம்: கல்விச் சிறப்பு, முயற்சி பலிதம், கற்பனை.
மீனம்: பொறுமை இழத்தல், நற்பெயரின்மை, வைத்தியச் செலவு.

— ஜோஸ்யர்


யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.

**இசைக்கலைமணி கர்நாடக சங்கீதம் வாய்ப்பாட்டு, பண்ணிசை, வயலின் வீணை, மிருதங்கம் நாட்டிய கலைமணி (பரதநாட்டியம்) நெறியினைப் பயிலுவதற்கான அனுமதி-94/95**

மேற்குறித்த பயிற்சி நெறியினைப் பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

**தகைமைகள்:**

(1) விண்ணப்பதாரிகள் க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் குறைந்தது மூன்று பாடங்களில் கர்நாடக சங்கீதம் அல்லது பரத நாட்டியம் ஒரு பாடமாக சித்தி பெற்றிருத்தல் வேண்டும். கர்நாடக சங்கீதம் அல்லது பரதநாட்டியத்தில் சித்திபெருதவர்கள் வட இலங்கைச் சங்கீத சபையினரால் நடாத்தப்படும் தரம் 4 இல் சித்தி பெற்றிருப்பதுடன் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பதாரி 29-06-1995 அன்று 15வயதிற்குமேற்பட்டவராகவும் 25 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

29-06-1995 இல் மேற்குறிப்பிட்ட கல்வித்தகமைகள்யாவுமுடையவராக இருத்தல்வேண்டும், மேற்கூறப்பட்டவைக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பல்கலைக்கழக பரீட்சைகளும், அனுமதிகளும் கிளையிலிருந்து பெறப்படும் விண்ணப்பப்படிவங்களில் மட்டுமே அனுமதி கோரலை நிரப்பி அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவமும் ரூபா 20/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலமாக விண்ணப்பப்படிவங்கள் பெற விரும்புவோர் ரூபா 20/- க்கான காசுக் கட்டளையையும் சுயவிலாசமிடப்பட்ட 23X10 செ.மீ. அளவிலான கடித உறையையும் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். குறித்த விண்ணப்பப்படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

இதற்கான அனுமதி அட்டைகளை அனுப்பி வைப்பதற்கு இலகுவாக யாழ்ப்பாண முகவரியை தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பதிவாளர்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
1995-06-19.

(ஏ-5031)


# அனர்த்தங்களை சமாளிக்க துரித ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் அனர்த்தங்கள் ஏற்படும் பட்சத்தில் இடம்பெயரும் மக்களுக்கு ஒருவாரத்துக்கு சமைத்த உணவுகள் வழங்கப்படும்.

ஒரு நபருக்கு மூன்று நாட்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் பின்வருமாறு விநியோகிக்கப்படும்.

தானியம் 1000 கிராம், அரிசி 400 கிராம், மாவு 300 கிராம், சீனி 75 கிராம், பருப்பு 150 கிராம், பயறு 150 கிராம், தேயிலை 25 கிராம் மிகுதியாக மிளகாய்தூள், விறகு, மரக்கறி என்பன வழங்கப்படும்.

இவ்வாறு யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அனர்த்தங்களை எதிர்கொள்ளல் தொடர்பான கூட்டத்தில் யாழ்: பிரதேச செயலர் குறிப்பிட்டார். 170-சி

## மகளிர்குழு பயிற்சி

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டஒன்றிணைந்த கூட்டுறவுக்கல்வி அபிவிருத்திட்ட மகளிர்குழுப்பயிற்சிவகுப்பு எதிர் வரும் 24ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு மாவட்ட மகளிர் குழுத்தலைவி திருமதி ரதி சோதிலிங்கம் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் ''தற்போதைய சூழ்நிலையில் பெண்கள் சார் உளவியல்'' என்ற தலைப்பில் திருமதி. கோகிலா மகேந்திரன் உரையாற்றுவார். ர-ரி


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

**மணிவாக்கு**

நீ செய்யும் காரியத்திற்கு நீயே பொறுப்பாளியாய் இருக்க வேண்டும் நீ செய்வதற்குப் பிறர் தண்டனை அடையும்படி ஏற்படக்கூடாது.

—மாக்ஸிம் கார்க்கி

# கொழும்பில் இனவாதத்தை தூண்டும் பல அமைப்புகள் தோற்றுவிப்பு!

(கொழும்பு)

வடக்கு கிழக்கு யுத்தத்தில் விடுதலைப் புலிகளின் கை ஓங்கியிருப்பதுடன் வெளிநாடுகளிலும் புலிகளின் செல்வாக்கு அதிகரித்து வருவதனால் அச்சம் அடைந்துள்ள இலங்கை அரசு புலிகளுக்கு எதிராக பல அமைப்புகளை தோற்றுவிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

ஸ்ரீலங்கவே ஜனதாவகே கடுகஸ்தம ராவய, தேசப்பிரேமி சங்க விதானய போன்ற பல அமைப்புகள் இவ்வாறு தோற்றுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் அமைப்புகள் இனவாதத்தை தூண்டும் துண்டுப்பிரசுரங்களை வெளியிடுதல் மற்றும் சுவரொட்டிகளை ஒட்டுதல் போன்ற நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டுள்ளன

இந்த அமைப்புக்களில் ஒன்று விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்காக ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்குமாறு சர்வதேச சமூகத்தை கேட்டுக் கொள்ளவிருக்கிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை நிதி அடிப்படையில் ஆதரிக்கும் நிறுவனங்கள், தனிநபர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்குமாறும் இந்த அமைப்பு வெளி நாடுகளைக் கேட்டுக் கொள்ளும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. -ரி

## பலதும் பத்தும்

### சூடேறுகிறது...!

அடுத்தாண்டு இந்தியாவில் பொதுத் தேர்தல் நடக்க இருக்கிறதல்லவா? அதனால்... அரசியலில் சூடேற ஆரம்பித்துவிட்டது.

அதேவேளை... வட நாட்டில்... வெப்பம் அதிகரித்து... அனல்காற்று வீசி... இதுவரை 550 பேர் உயிரிழந்து விட்டதாகச் செய்தி!

உலகிலேயே அதிக மழை வீழ்ச்சியைப் பெறும் சீராப்பூஞ்சியும் வட இந்தியாவில் தான் உள்ளது. அங்கு... மழை வீழ்ச்சி 15சத வீதம் குறைந்து விட்டதாம்! அது போல... ஆபிரிக்காவில் உள்ள கொங்கோவிலும் மழை வீழ்ச்சி கடந்த 20 வருடங்களில் பத்துசதவீதம் குறைந்து விட்டது.

நதிவளமற்ற நமது பகுதி கிடைக்கும் மழை நீரை வீணாக்காதிருக்க விழிப்போடு செயற்பட வேண்டியது அவசியமல்லவா?

— மயூரன்

## நமது நோக்கு

### திரிபுவாதம்

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களைத் தம தாயகமாகக் கொண்டு, சுதந்திரமாகத் தமிழர்கள் சுயாட்சி நடத்தி வந்தவர்கள். அவர்கள் தங்கள் பிரதேசங்களைப் போர்த்துக்கேயர் 1621இல் கைப்பற்றியபோது இழந்தார்கள். தனி இனமாக வாழ்ந்த கரையோரச் சிங்களவர்களின் பிரதேசங்கள், ஏற்கனவே போர்த்துக்கேயர்களின் கைக்குள் அகப்பட்டுவிட்டது கண்டியச் சிங்களவர்களின் நாடு, ஆங்கிலேயர்கள் அதைக் கைப்பற்றிய 1815ம் ஆண்டில் தான் ஆங்கிலேயர்களின் வசம் சென்றது. ஆகவே போர்த்துக்கேயர் களின் கைக்குள் சிக்கும்வரை. வட-கிழக்கிலுள்ள தமிழர்களின் நாடு சுதந்திரமான, சுயாட்சி நாடாக இருந்ததை வரலாறு தெரிந்தோர் எவரும் ஒப்புக்கொள்வர்; ஒப்புக் கொள்ளவும்தான் வேண்டும்.

புத்திஜீவிகள், துறை சார்ந்த விற்பன்னர்கள் என்று தம்மை எண்ணிக் கொள்ளும் இருபத்தியாறு சிங்களவர்கள், அதுவும் இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் இருவர்உட்பட தமிழர்கள் ஒரு தேசிய இனம் அல்லவென்றும், வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள் அவர்களின் தாயகம் அல்லவென்றும், தமிழர்களுக்குச் சுயநிர்ணயம் பெறும் உரிமை இல்லையென்றும், சந்திரிகாவின் இன்றைய நிலையைப் பிரதிபலிக்கும் வகையில், ஒரு நீண்ட பிரசுரத்தைச் சிங்களப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் பிரசுரித்துள்ளார்கள். தமிழர்களுக்கு அவர்களின் தனித்துவ வாழ்வுக்கான சகலதையும் வழங்கவேண்டிய சூழ்நிலை உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுவரும் இவ்வேளையில்; தமிழர்கள் நியாயமற்ற முறையில் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள் என்று உலகம் அறியும் இவ்வேளையில், சிங்களப் பேரினவாதத்தின் பிரசாரங்கள் அறிவுள்ளவர்கள் மட்டத்தில் எடுபடமுடியாத நிலையில் இருக்கும் இவ்வேளையில், இந்தப் புத்திசாலிகள் இருபத்தாறு பேரும் சகலதையும் திரிபுபடுத்தும் வகையில் பிரசாரம் செய்ய வெளிப்பட்டு இருக்கின்றார்கள்.

வரலாற்றை மாற்றித் திரித்து தமிழர்கள் ஒரு தேசிய இனம், அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை இருக்கிறது. வடக்கு-கிழக்கு அவர்களின் தாயகம் என்ற கோட்பாடுகள் 1951இல் தமிழரசுக்கட்சியாலும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் 1977ம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்திலும் அதன் பின்பு திம்புப் பேச்சுவார்த்தையின் போதும்தான் முனவைக்கப்பட்டன என்று விதண்டாவாதம் பேசுகிறார்கள்.

கண்டியச் சிங்களவர்கள் கூட 1920 களில் தாங்கள் தனியானவர்கள் தங்கள் தலைவிதியைத் தாங்களே தீர்மானிக்கும் வகையில் சுயாட்சி நடத்துவதற்கு ஐக்கிய அமெரிக்க அரசிலமைப்புப்போல் ஒரு சமஷ்டி அமைப்பை உருவாக்கவிரும்பினார்கள், என்பதை இந்தப்புத்தி ஜீவிகள் மறந்துவிட்டார்கள். இல்லை மறைக்கிறார்கள்.

இலங்கையில் தமிழர்கள் வடகிழக்கை தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் சுதந்திரமாக சமத்துவமாக சிங்களவருக்கு கிடைக்கும் உரிமைகள் யாவற்றையும் பெற்று சந்தோஷமாக வாழ்கிறார்கள் என்ற வாதத்தை முன்வைக்கிறார்கள் இந்தப் பிரமுகர்கள். இலங்கையின் ஏனைய பாகங்களில் வாழும் தமிழர்களின் நிலை உலகத்துக்கு தெரிந்ததே. இதையும் மூடிமறைக்கப் பார்க்கிறார்கள்.

இலங்கைக்கு சமஷ்டி ஆட்சி ஒவ்வாது என்று அவர்கள் கூறுகிறார்கள். அதனால்தான் தமிழர்கள் தமிழீழம் கேட்கிறார்கள் என்பது அவர்களுக்கு விளங்கவில்லை போல் தெரிகிறது. சிங்கள பேரினவாதம்தான் தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு வலுச்சேர்கிறதென்பதையும் இப் படித்தவர்கள் தெரிந்து கொள்ளவில்லை,

# ஆசிரியருக்கு ஏற்படும் அநீதி குறித்து தீர்வுகாண நடவடிக்கை

(கொழும்பு)

புதிய ஆசிரியர் சேவை அமுல் செய்யப்படுவதால் ஆசிரியர்களுக்கு அநீதி ஏதாவது ஏற்பட்டால்அதற்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி உயர் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

புதிய சம்பள அமைப்பின் பட்டதாரி ஆசிரியர்களும், பயிலுநர் பட்டதாரி ஆசிரியர்களும சில அநீதிகளை எதிர் நோக்குவதாக தெரியவந்துள்ளது.

ஆசிரியர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் வகையில் இந்தப் பிரச்னைகள் அனைத்தையும் ஆசிரியர் சேவையின் கீழான நிலையியற்குழு ஒன்று ஆராய்ந்து வருகின்றது.

கல்வித்துறையில் சம்பந்தப்பட்டவர்களின் சம்பள அமைப்பு முறையை இந்தக் குழு ஆராய்ந்து வருகின்றது.

நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு பிரேரணையின் போது திரு. விஜயபால மென்டிஸ் கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளித்த அமைச்சர் பத்திரன ஆசிரியர் தரங்கள் 167ல் இருந்து 6 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் சில பிரச்னைகள் தோன்றக் கூடும் என்று கூறினார். -ரி

# சுகாதார சேவையில் அரசியல்வாதி தலையீடு வைத்திய அதிகாரிகள் பகிஷ்கரிப்பு

## வடமேல் மாகாணத்தில் சம்பவம்

(கொழும்பு)

வடமேல் மாகாணத்திலுள்ள வைத்திய அதிகாரிகள் அவர்களது நிர்வாகக் கடமைகளை நேற்றுமுதல் பகிஷ்கரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாகாணத்திலுள்ள அரசியல்வாதி ஒருவர் சுகாதாரசேவை விவகாரங்களில் தலையிட்டதுடன் பெண் வைத்திய அதிகாரி ஒருவரை பயமுறுத்தியதை அடுத்து வைத்திய அதிகாரிகள் இவ்வாறு பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்தும் எதுவித பயனும் கிடைக்கவில்லை என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் லலித் சந்திரதாஸா தெரிவித்துள்ளார்.

வடமேல் மாகாணத்தின் சுகாதார அமைச்சர் டன்சன் பெர்ணண்டோ இதுபற்றித் தெரிவிக்கையில் மருத்துவ அதிகாரிகள் எடுத்துள்ள நடவடிக்கைகள் அவர்களது சம்பளத்தை நிறுத்த வழிவகுக்கும் என்றும் இதனால் சுமார் இரண்டாயிரம் பேர் பாதிக்கப்படுவார்கள் என்றும் கூறினார்.

இத்தகைய சில்லறை விடயங்களுக்கு பாரதூரமான நடவடிக்கை எடுப்பது தேவையற்ற செயலென்றும் பேச்சுவார்த்தை மூலம் இதற்கு இலகுவாக தீர்வுகாண முடியும் என்றும் சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி இது தொடர்பாக கருத்துவெளியிடுகையில் கூறினார்.

இது சம்பந்தமான உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ரி)

# காலியில் சட்டத்தை பேண முடியாத படையினர் 'வடக்கு-கிழக்கு யுத்தத்தில் வெற்றியீட்டுவது 'பகற்கனவே'!

(கொழும்பு)

காலியில் சராசரித்தெருவோரக் காடைத்தனத்தையே தடுத்து நிறுத்தி உரிய வகையில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணமுடியாத பாதுகாப்புப் படையினர் வடக்கு கிழக்கு யுத்தத்தில் வெற்றியீட்டுவதென்பது வெறும் பகற்கனவே என்று கொழும்பிலிருந்து வெளியாகும் வார இதழ் ஒன்று குறிப்பட்டுள்ளது-

காலிச்சம்பவம் குறித்து மேலும் சில தகவல்களை கொழும்புப் பத்திரிகைகள் தற்போது வெளியிட்டுள்ளன அவற்றில் சில வருமாறு,

காலி மாத்தறை போன்ற இடங்கள் சந்திரிகா ஆட்சியாளர்களின் கோட்டையாகவே விளங்குகின்றன- இந்த வன்செயல்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி தொண்டர்கள் ஐ, தே. க ஆதரவாளர்களுடன் இணைந்து தமிழர்களைத் தாக்கியதாகவே பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

காலிச்சம்பவம் தொடர்பாக இடமாற்றம் செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் சார்ள்ஸ் வன்னியாராச்சி இதுபற்றிக் கூறுகையில்: சம்பவ தினம் நான் கடமையிலேயே இருக்கவில்லை ஏன் என்னை இடம் மாற்றினார்கள் என்று தெரியவில்லை என்கிறார்.

ஐ தே- க ஆட்சியின்போது தென்மாகாண சபை விவகாரங்கள் தொடர்பாக எழுந்த பிரச்னைகளில் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்ற காரணத்திற்காகவே இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்கிறார் பெயர் குறிப்பிட விரும்பாத பொலிஸ் அதிகாரி யொருவர்.

இடமாற்றம் செய்யப்பட்டவர்கள் தமிழ் வத்தகர்களுக்கு மிகவும் உதவியாக இருந்தவர்கள் அவர்கள் நல்லவர்கள் என்று சொல்கிறார்கள் காலியில் உள்ள தமிழர்கள்

சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்கள் எனக் கருதப்படும் பதினொருபேரைக் கைது செய்திருப்பதாக அரசு அறிவித்திருந்தாலும் கைது செய்யப்பட்டவர்கள் அனைவருமே எரிகிற கடைகளில் இருப்பதைப் பொறுக்கியவர்கள் தான். முக்கியமானவர்கள் ஒருவரையும் கைது செய்யவில்லை என்கிறார் பொலிஸ் அத்தியட்சகர்.

எங்களுடைய இரு கடைகளையும் கொளுத்தியவர்களுள் ரஞ்சித் என்பவரும் ஒருவர்; பொலிஸாருக்கு அளித்தவாக்கு மூலத்திலும் இவரைப் பற்றிச் சொன்னோம் ஆனால் அவர் இன்னமும் கைதுசெய்யப்படவில்லை. மாறாக கடை வீதியில் சாதாரணமாக அவர் திரிகிறார். என்கிறார் தமிழ் வர்த்தகரொருவர்;

அகதிகளுக்கு எல்லா வசதியும் செய்யப்பட்டுவிட்டதாக அரசு கூறுகிறது. ஆனால் 500 பேர் கொண்ட அகதி முகாமுக்கு 6ம் திகதிவரை 50கிலோ அரிசி மட்டும்தான் வழங்கப்பட்டிருக்கிறது என்கிறார்கள் பாதிக்கப்பட்டவர்கள். கி-ரி

## நாளைய இதழில்

'பாலர் கல்வி" தற்போது சர்ச்சைக்குரிய ஒன்றாக மாறிவருகிறது. இது குறித்த புதிய கண்ணோட்டக் கருத்தை திரு. மு. திருநாவுக்கரசு வெளிப்படுத்துகிறார்.

இவரது எண்ணக் கருத்து நாளை வெள்ளி 'ஈழநாடு' இதழில் வெளியாகிறது

# சீதனத் தடைச் சட்டம்

நம் மக்களிடையே ஆழ வேரூன்றி கிளைபரப்பி தமிழ் மக்களின் உயிர் நாடியையே ஆட்டுமளவுக்கு 'சீதனம்' வளர்ந்துள்ளது. இந்த நாலெழுத்துச் சொல் ஆயிரக்கணக்கான இளம்பெண்கள், ஆண்களின் வாழ்க்கைக் கனவுகளைச் சிதைத்திருக்கின்றது. எத்தனையோ பேரை வாழ்வில் வெறுப்பேற்றிச் சாசடித்திருக்கின்றது. நம்மக்களின் நல்வாழ்வை தன் காலடியல் நசுக்குமுனையும் இச்சீதன அரக்கனை நசுக்கி அழிக்கும் நோக்கில் வேரோடு களையும் நோக்கல் நாம் 'சீதனச் தடைச் சட்டத்தை' நடைமுறைக்குக் கொண்டு வருகிறோம்.

எமது நீதி நிர்வாகத்துறையினரால் ஆக்கப்பட்டுள்ள இச்சட்டமானது 'சீதனத்தை' மட்டுமே தடை செய்கிறது. பெண்களுக்கான சொத்துரிமையோ, வாரிசுகளுக்குச்சேர வேண்டிய எதையுமோ தடுக்கவில்லை. ஆனால பெண்களின் சொத்துரிமையை மிகப் பலமாக பேணக்கூடிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

இச் சட்டத்தின்படி ஒரு பெண்ணும் ஆணும் திருமணம் செய்து வாழ்க்கையை ஆரம்பிக்கும்போது பெண் வீட்டார் விரும்பினுல் தம் பெண்ணின் பேரில் சொத்துக்களை எழுதலாம். ஆண் வீட்டார் தாம் கொடுக்க விரும்புபவற்றை தம்மகனுக்கு எழுதிக் கொடுக்கலாம் ஆண்வீட்டார் பெண் வீட்டாரிடம் கோரிப் பெறுவதோ பெண் வீட்டார் தாமாக விரும்பியோ விரும்பாமலோ ஆண் வீட்டாருக்குக் கொடுப்பதோ இச்சட்டப்படி கடும் தண்டனைக்குரிய குற்றமாகும். அவரவர் தம்வாரிசுகளுக்கு கொடுக்க விரும்பியவற்றை தத்தம் வாரிசுகளின் பெயர்ல் மட்டும் நீதி மன்றினுல் உறுதிப்படுத்தப்பட்ட பதிவாளர்கள் முன்னிலையில் பதிவு செய்வதற்கு மட்டும் இச்சட்டம் இடமளிக்கின்றது.

இனிமேல்

''இவ்வளவு சீதனம் தந்தால் தான் உங்கள் பொம்பிளப்பிள்ளையை எங்கள் மகனுக்கு முடித்து வைப்போம்''

என்று யாரும் மார் தட்ட முடியாது நம் பெண்கள் தம்மிடம் சொத்து இருந்தால். சொத்தடன் வருவார்கள். இல்லையேல் கைகளை வீசிய வாறு வருவார்கள்.

எல்லோரும் ஒரு விடயத்தில் தெளிவாக இருக்க வேண்டும். எந்தச் சொத்துப் பரிமாற்றமுமே நீதிமன்றின் அனுமதியுடன் தான் செய்யலாம். அது மட்டும் அல்லாமல் எந்தப் பெண்ணைத் திருமணம் செய்வதாக இருந்தாலும், அந்தப் பெண்ணின் பெயரில் தான் சொத்து எழுதப்படும். ஆகவே தன்பெயரில் பெண் வீட்டார் சொத்து தரவில்லை என்ற காரணத்துக்காக யாராலுமே திருமணம் செய்யாமல் இருக்க முடியாது. அத்துடன் பெண்கள் தமது சொத்துரிமையை பேணுவதில் திடமாக இருப்பதும் முக்கியமானது.

வெகு விரைவில் நடைமுறைக்கு வரும் இச் சீதனத் தடைச் சட்டம் பெண்கள், ஆண்கள் எல்லோருக்கும் இது வரை காலமும் இருந்த அழுத்தங்கள், சிக்கல்கள் பலவற்றை தீர்க்க முனைகின்றது இச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது எழும் புதிய சிக்கல்கள் காலப்போக்கில் நிவர்த்தி செய்யப்படும்.

-நன்றி: சுதந்திரப்பறவைகள்

# தமிழர் என நினைத்து சிங்கள இளைஞர் மீது தாக்குதல்

(கொழும்பு)

சிங்கள இளைஞர்ஒருவர் கம்பளை இந்து ஆலயத்தில்கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற பூசையில் கலந்து கொண்டு நெற்றியில் சந்தனப் பொட்டு வைத்துக் கொண்டு கம்பளையில் தமிழ் கடையொன்றின் முன்னுல் நின்ருர்.

இவரை தமிழர் என நினைத்த மற்றுமொருசிங்கள இளைஞர் நீங்கள் எல்லாம் புலிகள் உங்களை விட்டு வைக்ககூடாது எனக்கூறி அவரை தாக்கத்தொடங்கினுர்.

பின்னர் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் அவர் தமிழரல்ல சிங்களவர் எனக் கூறியதும் அதனைக் கேட்டு தாக்கியவர் வெட்கத்துடன் தலைதெறிக்க ஓட்டமெடுத்தாராம். - ரி

# மரணதண்டனை முறை மீண்டும் அமுல்

(கொழும்பு)

இலங்கையில் சில வருடகாலம் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த மரணதண்டனை முறை மீண்டும் அமுலுக்கு வந்துள்ளது.

மரணதண்டனையை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வர வேண்டுமெனக் கோரி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் பிரேரணைக்கு ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதரவளித்ததைத் தொடர்ந்து மீண்டும் இத் தண்டனையை அமுலாக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது,

மரணதண்டனை முறை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காலப் பகுதியில் கொலைக் குற்றங்கள் நாட்டில் பெருகியமையும், மரணதண்டனை தீவிரமாக அமுல் செய்யப்படும் மத்திய கிழக்கு மற்றும் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் குற்றச் செயல்கள் பெருமளவில் குறைந்துள்ளமையும் இங்கு மீண்டும் இத்தண்டனையை அமுலாக்கத் தூண்டுகோலாய் அமைந்தன.

கி-சி

# குழாய் மூலம் வழங்கப்படும் நன்னீர் யாழ். நகரில் துஷ்பிரயோகம்

## மராமத்து பொறியியலாளர் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குழாய்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நன்னீர் பொது மக்களால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வருவதாக யாழ் மாநகராட்சிமன்ற மராமத்துப் பொறியியலாளர் திரு பொ. தவராசாதெரிவிததார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் குடா நாட்டில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் இந்த வேளையில் நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் நீர்த் தாங்கிகள் நிரப்பப்பட்டு யாழ் நகர்ப் பகுதிகளுக்குக் குழாய்கள் மூலம் நன்னீர் வழங்கப்பட்டு வருகிறது. பல வகையான கஸ்டங்கள் மத்தியிலும் பொது மக்களின் நன்மை கருதி நீர் இறைக்கும் சிறிய வகை இயந்திரங்கள் மூலம் நீர்த் தாங்கிகள் நிரப்பப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. இந் நன்னீரைப் பொது மக்கள் துணிவகைகள் கழுவுவது, பூஞ் செடிகளுக்கு நீர்ப் பாய்ச்சுவதுபோன்றவற்றிற்கு பயன்படுத்தி வருகிருர்கள் அத்துடன் 'பைப்' களிலிருந்து நீரைப் பெற்றுக் கொண்டபின் 'பைப்'புக்களை பூட்டாது செல்வது போன்ற செயல்களால் நன்னீர் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை யாழ் நகரில் பல பகுதிகளிலும் காணக்கூடியதாக உள்ளது. இந்த வகையான செயல்களால் நன்னீரை துஷ்பிரயோகம் செய்ய வேண்டாமென மராத்துப் பொறியியலாளர் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்

இதேவேளை குரு நகர் யாகப்பர் ஆலய வளவினில் அமைந்திருக்கும் நீர்த் தாங்கி மூலம் இப்பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளை யாழ் மாநகராட்சிமன்றம் மேற்கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். 162-ரி

# கிழக்கில் முஸ்லிம் கிராமங்களில் பதற்றம் நீங்கியது

(மட்டக்களப்பு)

முஸ்லீம் மக்களை எச்சரிக்கும் விதமாக வெளியிடப்பட்டதாககூறப்படும் பிரசுரத்திற்கும் தங்களுக்கும் தொடர்பேதுமில்லை என விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளவதைதொடர்ந்து மட்டக்களப்பின்காத்தான்குடி உள்ளிட்ட முஸ்லீம் கிராமங்களில் ஏற்பட்டிருந்த பதட்டம் நீங்கியிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன

விடுதலைப்புலிகள் மறுப்பு அறிக்கை 'புலிகளின்குரல்' ஒலிபரப்பில் அறிவிக்கப்பட்டது குறித்து அப்பகுதியிலுள்ள முஸ்லிம்களுக்கு தகவல்கள் தெரிவிக்கபட்டுள்ளது.

இதனையடுத்து அங்குஏற்பட்டிருந்தபதட்ட நிலைதணிந்து தற்போது சுமூகநிலை மீண்டும் ஆரம்பித்திருக்கின்றது கி-சி

## முதலாம் இடம்

(யாழ்பாணம்)

தமிழ்மொழி - கலைத்திறன் போட்டிகளில் மாவட்டநிலையில் யா/கனகரத்தினம் ம.ம.வி. பல பரிசில்களைப் பெற்றுள்ளது.

ஆக்கஇசை தனிப்பிரிவு 3ல் பா. கரன் 1ம் இடத்தையும், நாட்டார் கருவிஇசைகட்டியம் திறந்தபோட்டியில்1ம்இடமும்யும், கிராமிய நடனம்- குழுபிரிவு2 1ம்இடமும், தனி நடனம் (சாஸ்திரீயம்) பிரிவு -4 ம.தவேந்திரன் 3 ம் இடமும் பெற்றுள்ளனர். ர-சி

# $14\frac{1}{2}$ லட்சம் மில்லியன் டொலருக்கு மூன்று விமானங்கள் கொள்வனவு

[கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சிக்காலத்தில் ஒன்பதரை லட்சம் மில்லியன் டொலருக்கு விமானங்கள் கொள்முதல் செய்வதற்கு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை நீக்கிய பொதுசன முன்னணி அரசாங்கம், தற்பொழுது மூன்று விமானங்களை பதினுன்கு அரை மில்லியன் டொலருக்கு கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளது என்று 'திரிசூலே' பத்திரிகை தெரிவித்துள்ளது.

பொதுசன ஐக்கிய முன்னனி இந்த விமானக் கொள்வனவு ஒப்பந்தத்தை விலக்கியதினுல் தேர்தல் காலத்தில் அரசியல் லாபம் பெற்று தேர்தலில் அமோக வெற்றியீட்டியுள்ளது.

ஊழல், லஞ்சம் ஆகியவற்றை ஒழிப்பாம் என்று பதவிக்கு வந்த பொதுசன முன்னணி அரசாங்கம் இந்த விமானக் கொள்வனவால் 5 மில்லியன் டொலர் அதிகம் கொடுத்து விமானங்களை கொள்முதல் செய்துள்ளது என்று 'திரிசூலே' மேலும் தெரிவித்துள்ளது ம-கி

# நீண்டநாள் பகை கத்தி வெட்டில் முடிந்தது

(யாழ்ப்பாணம்]

நீண்டநாள் பகைமை கத்தி வெட்டில் முடிந்துள்ளது.

கொழும்புத்துறை மணியந்தோட்டம் வசந்தபுரத்தில் இடம்பெற்ற அச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; கடந்த ஒருமாதத்திற்குமுன் இருகோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பு நாளாந்தம் சிறுசிறு தகராறுகளாக இடம் பெற்று வந்தது.

இந்தப்பகையை நீடிக்கவிடாத நிலையில் இருகோஷ்டியினரும் சமாதானமாகச் செல்வோம் என பேசி சமாதானமாகச் சென்றவேளை ஒரு கோஷ்டி நிராயுதபாணிகளாக நின்ற மற்றய கோஷ்டியினரை அடித்துத் தாக்கி வெட்டியதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் வசந்தபுரத்தைச் சேர்ந்தவர்களான சின்னக்குமார் ஜெனிராஜ் [வயது 25) செபஸ்தியாம்பிள்ளை கிறிஸ்டீன் பெனுண்டோ [38 வயது) நாக

(5ம் பக்கம் பார்க்க)

# வன்னி மாவட்டங்களிலிருந்து விதைநெல் தருவிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு பெரும்போக நெற் செய்கைக்கென கிளிநொச்சி, மன்னுர், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு விதை நெல்லை தருவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக யாழ் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் த. சிவலோகநாதன் தெரிவித்தார்.

எச் -4, பீஜி -500, ஏரி -402 ஆகிய இனங்களை சேர்ந்த விதை நெல்களே தருவிக்கப்படவுள்ளன.

இதனை விட கொழும்பு பேராதனை விவசாய திணைக்களத்தில் இருந்தும் விதை நெல்லை யாழ் மாவட்டத்திற்கு கப்பல் மூலம் தருவிப்பதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினுர். 170-ரி

## உணவுப்பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவு சங்கம் மாணவர்களுக்கான மேலதிக உணவு முத்திரையின் 6ஆம் புள்ளிக்கு உணவுப்பொருள்களை விநியோகித்துவருகின்றது:

இதனைவிட குழந்தைகளுக்கான பால்மா முத்திரையின் 12 புள்ளிக்கும் பொருட்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

170-ரி

## நகைக் கடையில் திருட்டு

(ஆனைப்பந்தி)

நள்ளிரவில் நகைக் கடையைஉடைத்து உட்புகுந்த திருடர்கள் பல ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை சூறையாடிச் சென்றுள்ளனர், நேற்று முன்தினம் இரவு இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

யாழ். நகரில் உள்ள நகை விற்பனையகம் ஒன்றின் கதவைஉடைத்தே இத்திருட்டு மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. 101-கி

# திருமலை இந்து ஆலய காணிகளில் சிங்கள மீனவர்க்கு குடிசைகள்

(கொழும்புத்துறை)

திருமலை மாவட்டத்தில் சிங்களக்குடியேற்றம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்ற தமிழ் மக்களின் வீடுகளிலும் காணிகளிலும் பெரும்பாலன சிங்களவர் குடியேறி வருவதாகவும் கடந்த காலங்களில் திருமலை கிராமப்புறங்களில் நடைபெற்று வந்த இந்த அடாவடித்தனமான குடியேற்றம் தற்போது திருகோணமலை நகர்ப் பகுதிகளிலும் பரவலாக நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகின்றது.

இங்குள்ள இந்து சமயத்தவர்களின் ஆலயங்களுள்ள அனேக காணிகளில் சிங்கள மீனவர்கள் வீடுகள், குடிசைகள் அமைத்து குடியேறி வருகின்றனர்.

நகர்ப்புறங்களிலுள்ள தமிழ் மக்களின் அனேக வீடுகளில் கடல் தொழில் செய்யும் சிங்கள மீனவர்களின் குடும்பங்கள் அண்மைக் காலமாக குடியமர்த்தப்பட்டு வருகின்றன. 154-கி

# மணிப்பூர் இனக் கலவரத்தில் 17 ஆயிரம் தமிழர்கள் பாதிப்பு

(சென்னை)

இந்தியாவில் மணிப்பூரில் அண்மையில் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட வன் செயல்களினால் பதினேழாயிரம் தமிழர்கள் பாதிக்கப் பட்டுள்ளனர் என தமிழக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் எம். இராமதாஸ் தெரிவித்துள்ளார்

உடமைகளை இழந்து பல் வேறு துன்பங்களுக்கும் உள்ளாக்கப்பட்ட இத் தமிழர்களுக்கு உதவுவதற்கு தமிழக அரசு எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை எனவும் இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

தமிழர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கு ஆதரவாக அறிக்கை விடக்கூட தமிழக அரசோ அன்றி அமைச்சர்களோ தவறிவிட்டனர் எனக் குற்றம் சாட்டியுள்ள இராமதாஸ் முதல்வர் ஜெயலலிதாவை எப்படியாவது ஆட்சியில் இருந்து வெளியேற்ற எதிர்க்கட்சிகள் முடிவெடுத்து விட்டன என்றும் இதற்காக இனிவரும் தேர்தலின் போது வலுவான எதிர்க்கட்சிகளின் கூட்டணி அமையும் என்றும் கூறியிருக்கிறார். ம-கி

## நாடு கடத்தல் விவகாரம்

# இரு வாரங்களில் வழக்கு தாக்கல்!

]கொழும்பு[

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனை நாடு கடத்துவது தொடர்பாக இரண்டு வாரங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்படுமென கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த நாடு கடத்தல் விவகாரம் தொடர்பாக இந்தியா சமர்ப்பித்த ஆவணங்களை இலங்கை அதிகாரிகள் அறுவர் தீவிரமாக பரிசீலித்து வருகின்றனர்கள் என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை கைதுசெய்து இந்தியாவுக்கு அனுப்புவது சர்வதேசப் பொறுப்பாகுமென வெளியுறவு அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார். ரி-சி

## பெரும் போருக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு வரி செலுத்தல் என போருக்கான செலவை பெருமளவில் அதிகரிப்பதன் மூலம் அரசு விரைவில் பெரும் போரை நடாத்தும் என எதிர் பார்க்கப்படுவதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன. சி

## சர்வதேச

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதன் மூலம் இலங்கை புலிகளுக்கு எதிரான போரில் சர்வதேச நாடுகளின் உதவியை நாடியுள்ளதாக 'ஏ. எவ். பி' செய்தி தெரிவித்தது. -வி-சி

## சப்புகஸ்கந்தவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்குண்டு வெடித்திருந்தால் சப்புகஸ்கந்தையில் பலத்த சேதமேற்பட்டிருக்கலாம் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. ரி-சி

## நீண்டகால

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதும் சுரேஷ் (25 வயது) ரவி (23 வயது) ஆகிய நால்வருமே கத்திவெட்டுக் காயத்திற்குள்ளான வர்களாவர். 154-90-ரி

## இலங்கையில்

(1ம் பக்கத்தொடர்ச்சி)

ரித்திருப்பதன் நோக்கமாகும்.

முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியை கொலைசெய்வதற்கு திரு. பிரபாகரனே காரணமென வாதிடும் இந்தியா ராஜீவ் இறந்து மூன்று வருடங்களின்பின்பு திடீரென திரு. பிரபாகரனை தம்மிடம் ஒப்படைக்கும்படி தற்போது கேட்பது எந்த வழியிலும் நியாயமற்றது.

இனப்பிரச்னையை தீர்க்க அரசு விரும்பினால் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேசத்தான் வேண்டுமென்றும் குறிப்பிட்டார். (வி-ரி-சி)

## இருமாதகால

(1-ம் பக்கத் தொடர்ச்சி

முகாம்கள் தகர்த்து அழிக்கப்பட்டன. விடுதலைப் புலிகளின் தாக்குதல் காரணமாக கிழக்கில் பல இராணுவ முகாம்கள் மூடப்பட்டன. ஒரு பவள், இரண்டு சலாடின் கவச வாகனங்கள் தகர்க்கப் பட்டன.

பெயர் சூட்டி இராணுவம் பெருமெடுப்பில் நடாத்திய இரு இராணுவ நடவடிக்கைகள் விடுதலைப் புலிகளின் பலத்த எதிர் தாக்குதலால் முறியடிக்கப்பட்டன. ம-சி

## வழிப்பறிக்கொள்ளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட ஆறுபேரும் தற்போது தீவிர புலன் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். அண்மைக்காலமாக யாழ்ப்பாணப் பிரதேசத்தில் நடைபெற்ற வழிப்பறிக் கொள்ளைகள் தொடர்பாகவும் விசாரணைகள் நடைபெற்று வருகிறது.

இக்கொள்ளைக் கோஷ்டியை கைது செய்ய உதவிபுரிந்த பொதுமக்களுக்கு காவல் துறையினர் நன்றி தெரிவித்துள்ளனர். சி

## பத்திரிகை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பி. பி. ஸி, வெரித்தாஸ் வானொலியும் வெளியிட்ட அறிக்கைகள் எமது கவனத்திற்கு வந்துள்ளன. அதில் மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்குழு எனத் தன்னைக் கூறிக் கொள்ளும் ஒரு குழு வெளியிடும் அறிக்கைகள் வெளிவந்துள்ளன. இதனால் நாம் குழப்பமடைந்துள்ளோம்.

''மனித உரிமைகளுக்கான யாழ், பல்கலைக் கழக ஆசிரியர் குழு'' எனக் கூறிக்கொள்ளும் இந்தக் குழுவில் எமது ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த எவரும் அங்கம் வகிக்கவில்லை. நாம் இந்த அமைப்புடன் எதுவித தொடர்பையும் கொண்டிருக்கவுமில்லை. மேலும் இவ்வாறான அமைப்பொன்று யாழ் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து செயற்படுவதாக எமக்கு அறவே தெரியாது.

எனவே மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் குழு எனக் கூறுவோர் தெரிவித்திருக்கும்கருத்திற்கும் எமக்கும் எதுவித தொடர்புமில்லை எனவும் தெரிவித்துள்ளனர். சி

## முஸ்லிம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிக்கு எம்மீது பூரண நம்பிக்கை இருக்கிறது. அதே போல எமக்கும் அவர் மீது பூரண நம்பிக்கை உண்டு. இறுதிவரை நாம் அவருக்கு ஆதரவு வழங்குவோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையில் இஸ்ரேல் செல்வாக்கு செலுத்துவதை எந்த நிலையிலும் அனுமதிக்க முடியாது என்னும் முஸ்லிம் காங்கிரஸின் முடிவில் மாற்றம் எதுவும் இல்லை என்றும் வெளிவிவகார அமைச்சரிடம் முஸ்லிம் காங்கிரஸ் நேரடியாக தெரிவித்துள்ளதாம். ரி-சி

## விடுதலைப்

[1-ம் பக்கத் தொடர்ச்சி[

இரு வாரங்களுக்கு முன் லக்ஸம்போர்க்கில் ஐரோப்பிய சமூக உறுப்பினர்களிடம் ஐரோப்பிய நகரங்களில் விடுதலைப் புலிகளின் அலுவலகங்களை மூடிவிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது: ஆனால் ஐரோப்பாவில் புலிகள் தாங்கள் வாழும் நாடுகளுக்கு எதிரான குற்றங்களை செய்யாத நிலையில் அவர்கள் மீது வழக்குத் தொடுக்க முடியாதென அவை கூறிவிட்டன.

புலிகளின் அலுவலகங்களை மூடிவிட்டால் அவர்கள் தலைமறைவாகிவிடும் நிலை எற்பட்டுவிடும். அவர்களைக் கண்காணிப்பது கடினமென ஐரோப்பிய கவுன்ஸில் உறுப்பினர்கள் தெரிவித்ததாகவும் அவர் கூறினார். -சி

# வர்ணாச்சிரம தர்மம் விளக்கம்

## மக்கள் கருத்து

கடந்த வியாழனன்று 'ஈழநாடு'. பத்திரிகையில் மக்கள் கருத்து பகுதியில், திரு. நந்தகுமார் என்பவர் எழுதிய கடிததிதைப் பிரசுரித்திருந்தீர்கள். அது ஓர் நியாய பூர்வமானதாகவே அமைந்துள்ளது. கம்பன் கழக ஜெயராஜ் கூறிய கருத்திற்கு ஓர் எதிர் விளக்கமளிப்பதாக அக்கடிதம் அமைந்திருந்தது.

வர்ணாச்சிரமம் என்றால் என்ன என்பதன் கருத்தினை நாம் தெளிவாக நோக்க வேண்டும். இம்முறையானது முற்று முழுதாக வகுப்பு வாதக் கருத்தை முன்னெடுக்கும் ஓர் கோட்பாடாகவேயுள்ளது, அதாவது, பிராமணர்கள், ஷத்திரியர்கள், வைசியர், சூத்திரர் என்ற நால்வகை வர்ணங்களின் செயற்பாட்டினை விளக்குவதாகவே அமைகிறது. இவ்வர்ணாச்சிரம முறையில் இந்நால்வகை வர்ணங்களும் வகுக்கப்பட்டுள்ளது. இதில் பிராமணர்கள் பூசை செய்வோராயும் ஆசிரியர்களாயும், பண்டிதர்களாயும் விளங்குவர்; அரசாள்வதும், போர் செய்வதும் ஷத்திரியர்கள். விவசாயிகளாயும், வணிகராயும் விளங்குவோர் வைசியர் எனப்பட்டனர். இவர்களுக்கு அடிமைத் தொழில் புரிவோர் சூத்திரராகக் கொள்ளப்பட்டனர். முதல் கூறிய இரு இனத்தவரும் சிறு தொகையினராயும், வைசியர் பெரும் தொகையினராயும் காணப்பட்டாலும் முதல் இரு இனத்தவரே உயர் சாதியினராகக் காணப்பட்டனர். சூத்திரனின் செல்வத்தைச் சுரண்டி வைசியர் மற்றைய இரு உயர் சாதியினருக்கும் வழங்கி வந்தனர். இதற்கு அக்கால அரசியல் அமைப்பு நில மானிய முறையில் அமைந்தமை வழிகோலியாக இருந்தது. ஆகவே இச்சமுதாய அமைப்பை முதல் மூன்று வர்ணத்தாரும் பேணவேண்டிய கட்டாயம் அவர்களுக்கு இருந்தது. நான்காவது வர்ணத்தாராகிய சூத்திரர்களுக்குள்ளும் பல பகுதிச் சாதியமைப்புகள் பிரித்து வைக்கப்பட்டமையால் ஏழ்மையிலும் அதிக ஏழ்மை யாருடையது எனும் விதத்தில் அவர்கள் திருப்தி அடைந்து வாழ்ந்து தம் உழைப்புக்களை ஏனைய மூன்று வர்ணத்தாருக்கும் தாரை வார்க்கவேண்டிய நிலை இருந்தது. இவர்களின் உழைப்புச் சக்தியே அரசினதும், ஆளும் வர்க்கத்தினரதும் உபரியை மேலும் அதிகரிக்கச் செய்தது. மேலும் செல்வத்தைப் பெருக்கும் நோக்குடன் போரில் ஈடுபடவும் வைத்தது.

இத்தகைய ஓர் கோட்பாட்டை கொண்டதுதான் இவ்வர்ணாச்சிரமக்கோட்பாடு. இவ்வாறான பிரிவினைக் கருத்தையும் கொள்கையையும் கொண்ட இத்தகைய ஒரு கோட்பாடு தற்கால சூழ்நிலையில் எமது சமுதாயத்திற்கு தேவைதானா?

சாதியம் ஒழிந்து, சமய பேதமின்றி சமத்துவ சுதந்திர தமிழீழத்துக்காக போராடிக் கொண்டிருக்கும் தமிழர்களாகிய நாம் எல்லோரும் ஒரு தலைவனின் கீழ் வாழப் போகும் எம் சமுதாயத்தில் சாக்கடையாக ஊடுருவி நிற்கும் சாதியத்தை ஒழித்திட ஒத்துழைக்கும் கருத்துக்களையே நாம் மக்களுக்கு கூற வேண்டுமே தவிர இத்தகைய பிற்போக்கான மூடநம்பிக்கைக் கருத்துக்களை முன் வைத்து சமுதாயத்தைச் சீர்குலைக்கும் வகையில் நடந்து கொள்வது ஏற்கப்படமுடியாத ஒன்றாகும்.

பத்திரிகைகள் மக்களை நல்வழிப்படுத்தும், ஒற்றுமைப் படுத்தும் ஓர் கருத்து ஊடகமாகும். அவ்வாறான நற்சேவையை ஆற்ற வேண்டிய பத்திரிகைகளில் மாற்றம் போன்ற சஞ்சிகைகள் இத்தகைய ஒரு சில மூடக்கருத்துக்களைப் பிரசுரிப்பதால் மக்களுக்கு ஒரு தவறினைச் செய்வதாகவே கருதப்படும்.

நாம் தமிழினம். நம் நாடு தமிழீழம். இதற்குள் ஆயிரம் பிரிவும், அடிமை வாழ்வும் தேவையா? இதனை முன்னெடுப்பதாக வரும் கருத்துக்களை மக்கள் மத்தியில் விதைப்பதா? இல்லை. அப்படியான சீர்கெட்ட வாழ்க்கை முறையும், அதனை வற்புறுத்தும் இத்தகைய கோட்பாடுகளும் அடியோடு மாறவேண்டும். நாளை மலரும் தமிழீழச் சோலையில் தன்னிகரில்லாத் தலைவன் வழியில் தமிழினம் தலைநிமிர்ந்து வாழ, தமிழீழத் தாயின் மக்களாக அனைவரும் சமத்துவமாய், சோதரராய் வாழ வழிவகுக்கும் கருத்துக்களே, கொள்கைகளே இன்றைய மக்கள் மத்தியில் விதைக்கப்பட வேண்டும். அதற்கு இத்தகைய பிற்போக்குவாதிகளின் கருத்தும், செயற்பாடும் முட்டுக்கட்டையாக இல்லாது மாற்றியமைக்கப்படவேண்டும் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

வே. கலையரசி

மானிப்பாய்.

# இஸ்ரேல் உறவு குறித்து 'தீர்மானிக்கப்படவில்லை

(கொழும்பு)

இஸ்ரேலிய ராஜதந்திர உறவு குறித்து இன்னமும் தீர்மானிக்கப் படவில்லை என்று அமைச்சர்லக்ஷ்மன்கதிர்காமர் தெரிவித்தார்,

இலங்கை இஸ்ரேல் உறவு குறித்து முஸ்லீம் காங்கிறஸ் உறுப்பினர்கள் அமைச்சர் கதிர்காமருடன் பேச்சு நடத்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்,

இஸ்ரேலுடனான உறவுகுறித்து முஸ்லீம் காங்கிறஸ் உறுப்பினர்கள் தமது அதிருப்தியையும் கண்டனத்தையும் மேற்படி அமைச்சரிடம் தெரிவித்தனர்;

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்தியயாழ் ஆங்கில மருந்து வணிக மன்றத்தின் விசேட நிர்வாக சபைக் கூட்டம் நாளை 23-ம்திகதிவெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

0 0 0

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு அரச ஓய்வூதியர் நலன் புரிக்கூட்டுறவுச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் 25ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு சித்தன்கேணியில் டாக்டர் ஆ. இராசநாயம் தலைமையில் நடைபெறும்.

## ★ முஸ்லிம்களிடையே மோதல்

# பஃ்ரெயினில் குண்டுத் தாக்குதல்; 4 தமிழர் நாடு கடத்தப்பட்டனர்

[கொழும்பு]

பஃ்ரெயின் நாட்டில்முஸ்லிம்களிடையே ஏற்பட்ட கலவரத்தினுல் அவர்களுக்கு சொந்தமான கட்டிடம் ஒன்று குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது.

இதனுல் அங்கு பணிபுரிந்த இலங்கைத்தமிழ் இளைஞர்கள் நால்வர் பொய்க்குற்றம் சாட்டப்பட்டு அங்கிருந்து உடனடியாக திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்தமாதம் நடைபெற்றுள்ளது இது பற்றி மேலும் தெரியவருவதாவது:

அங்குள்ள முஸ்லிம்களிடையே ஏற்பட்ட கலவரத்தையடுத்து வேருெரு பிரிவினர் இவர்களின் கட்டிடம் ஒன்றை குண்டுவைத்துத் தகர்த்தனர். அவ்வேளை முஸ்லிம்களுக்குத் துணையாக இலங்கையின் தென்பகுதி சிங்களப் பெண்மணிகள் இக்குண்டு வெடிப்புப்பற்றி அந்நாட்டு பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனராம்.

அங்குள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக சிங்களவர் ஒருவரே கடமையில் ஈடுபெட்டிருந்தார். ஆத்திரமுற்ற அந்த சிங்கள பொலிஸ் பொறுப்பதிகாரி அங்கு வேருெரு கட்டிடத்தில் தங்கியிருந்து தொழில்புரிந்த வடபகுதியைச் சேர்ந்த நான்கு தமிழ் இளைஞரைக் கைது செய்து கண்மூடித்தனமாகத் தாக்கியபின் நீதிமன்றில் ஆஜர் செய்தபோது அந்த நால்வரையும் உடனடியாக நாடுகடத்துமாறு உத்தரவிட்டமைக்கமைய அவ் இளைஞர்கள் நால்வரும் கடந்த மாத இறுதியில் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனா

சுன்ஞகம், இடைக்காடு, வடமராட்சி ஆகிய இடங்களைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு பரிதாபமாகத் திருப்பி அனுப்பப்பட்டவர்களாவர். 160 சி

# பாதுகாப்பு வரி அறவிட தமிழ் கட்சிகள் ஆதரவு

(கொழும்பு)

பாதுகாப்பு வரி திருத்தச் சட்டமூலத்தை ஆதரித்து நேற்று நாடாளுமன்றத்தில் தமிழ் கட்சிகள் வாக்களித்துள்ளன.

மேற்படி சட்ட மூலத்தை ஈ.பி.டி.பி. புளொட், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய தமிழ் கட்சிகள் ஆதரித்து அரசாங்கக் கட்சியுடன் சேர்ந்து வாக்களித்துள்ளன.

ஐ.தே. கட்சி வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. தமிழர் விடுதலைக்கூட்டணி வாக்களிப்பின்போது சபையில் இருக்கவில்லை.

பாதுகாப்புவரி திருத்தச் சட்டமூலம் 124 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறியது. ஒருஉறுப்பினர் மட்டும் எதிர்த்து வாககளித்தார். வி-சி

# யாழ். ஆஸ்பத்திரிக்கு டீசல் எடுத்துவர ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனு வைத்தியசாலைக்கு 'மாகோ' கப்பலில் டீசல் எடுத்துவருவதற்கான நடவடிக்கைகளை கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். அரச அதிபர் மேற்கொண்டுள்ளார்.

டீசலை கப்பலில் கொண்டு செல்வதற்கான அனுமதியை பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழு வழங்கியுள்ளது.

இதேவேளை கொழும்புத் துறைமுகத்தில் மாகோ கப்பலில் மண்ணெண்ணை பரல்களை ஏற்றும் வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. 170-சி

# யுத்தத்தின் பெயரால் ஐ.தே.க. பணத்தை விரயமாக்கிவிட்டது

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சி யுத்தத்தின் பெயரால் ஒன்பது கோடி ரூபாவை விரயமாக்கி விட்டதாக கைத்தொழிலபிவிருத்தி அமைச்சர் திரு. சி. வி. குணரத்ன குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாதுகாப்பு வரி அறவீட்டு திருத்த சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்:

முன்னைய அரசு பாதுகாப்பு வரியை ஒன்றிலிருந்து 3.5வீதமாகஅதிகரித்திருந்தது. ஆனுல் நாம் ஒரு சத வீதத்தால் மட்டுமே இவ்வரியை தற்போது அதிகரித்திருக்கிருேம். யுத்தத்திற்கு தேவைப்படும் ஆயுதங்களை இராணுவத்தினருக்குப் பெற்றுக் கொடுப்பதற்காகவே இவ்வரி அதிகரிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. இந்த வரிஅறவீட்டைத் தொடர்ந்தும் மேற்கொள்ள அரசு இடமளிக்காது எனவும் சி. வி. குணரட்ன தனதுரையில் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முன்னுள் அமைச்சர் விஜயபாலமென்டிஸ் தனது உரையில், பாதுகாப்பு வரியை ஐ. தே. க. அரசு அறவிட்டபோது அதனை நியாயமற்ற செயலென வர்ணித்த எதிர்க் கட்சியினர் தற்போது ஆட்சிப்பீடமேறியதும் அத்தவறையே செய்கின்றனர் எனக் கூறினுர் கி-சி

# கல்லருவ இராணுவ முகாம் மூடப்பட்டது

(திருமலை)

திருகோணமலை கல்லருவ இராணுவ முகாமை இராணுவம் மூடிவிட்டது.

கல்லருவ சிங்களக் குடியேற்றத் திட்டத்துக்கு இராணுவம் பாதுகாப்பு வழங்கி வந்தது. கடந்த மாதம் இப்பகுதியில் 42 சிங்கள மக்கள் கொலை செய்யப்பட்டதை அடுத்து இக்கிராமத்திலிருந்த மக்கள் அனைவரும் வெளியேறிவிட்டதனுல் இந்த இராணுவ முகாம் மூடப்பட்டுள்ளது.

கிழக்கில் கடந்த சில வாரங்களாக பல படை முகாம்கள் மூடப்பட்டு வருவதும் தெரிந்ததே. -வி-சி

# தமிழக கடலோர பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு தேவை

(சென்னை)

தமிழ்நாட்டின் கடலோரக் கண்காணிப்பை தீவிரப்படுத்தும் வகையில் மாநிலக் கடலோரப் பாதுகாப்பு படையினருக்கு இந்திய கடற்படை ஒத்துழைப்புத் தரவேண்டுமென தமிழக அரசு கோரியுள்ளது.

நேற்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற வருடாந்த மாநில நிர்வாக இராணுவ ஒத்துழைப்புக்கான மாநாட்டை தொடக்கி வைத்து பேசிய மாநில தலைமைச் செயலர் ஹரிபாஸ்கர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

இராணுவத்தின் அனுபவம் தொழில நுட்ப ஒத்துழைப்பு மற்றும் உளவுத் தகவல் பரிமாற்றம் என்பவற்றின் மூலம் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பேணும் பணியை செவ்வனே நிறைவேற்ற இது உதவும் என ஹரிபாஸ்கர் தனது உரையில் மேலும் கூறினுர்.

ஆந்திரம், தமிழ்நாடு, கேரள மற்றும் கோவை மாநிலங்களின் தலைமை இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் ஆர். எஸ். நகரா இதற்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும் என்ருர். -தீ-சி

# 350 பயணிகளுடன் நடுவானில் யப்பான் விமானம் கடத்தப்பட்டது

(டோக்கியோ)

யப்பானில் உள்ளூர் சேவையிலீடுபட்டிருந்த 'போயிங் 747' விமானமொன்று 350 பயணிகளுடனும், 15 விமான சிப்பந்திகளுடனும் நடுவானில் வைத்து நேற்று கடத்திச் செல்லப்பட்டிருக்கின்றது.

இந்த 'ஜம்போ ஜெட்' விமானம், கையில் ஐஸ் பெட்டியை வைத்திருந்த ஒருவரினலேயே கடத்தப்பட்டதாகவும், விமானத்தை கடத்துவதற்கு முன்னர் அவர் விமானப் பணிப் பெண் ஒருவரை மடக்கி சிறைப்பிடித்துக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தன்னை 'ஓம்ஸ் சின்றிக்யோ' மதக் குழுவின் அங்கத்தவர் என அறிமுகப்படுத்திக் கொண்ட இந்த நபர் தற்பொழுது சிறை வைக்கப்பட்டுள்ள தமது குழுவின் தலைவரை விடுதலை செய்தாலே பணயக் கைதிகளை விடுவிக்க முடியுமென நிபந்தனை விதித்திருக்கிருர்.

விமானத்திற்கு எரிபொருள் வழங்குமாறு முதலில் கோரிக்கை விடுத்த கடத்தல்காரர் அது மறுக்கப்படின் விமானத்தை தகர்க்கபோவதாக எச்சரித்துள்ளார்.

இந்த பணயக் கைதிகளை விடுவிப்பதற்கான சகல முயற்சிகளிலும் ஈடுபடுமாறு யப்பானிய பிரதம மந்திரி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதனை தொடர்ந்து இரசாயன ஆயுத எதிர்ப்புப் பிரிவு படைக் குழுவொன்றும், பல போர் விமானங்களும், ஹெலிகொப்டர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இரண்டு படை விமானங்கள் ஏற்கனவே கடத்தப்பட்ட ஜம்போ ஜெட் விமானம் தரித்து நிற்கும் வடக்கு யப்பானில் உள்ள உள்ளூர் விமான நிலையத்திற்கு டோக்கியோவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. -கி.சி

## வடமராட்சி ப. நோ. கூ. சங்கங்களின்

# ஒரு கோடி ரூபா பணம் கொழும்பில் முடக்கம்

(நெல்லியடி)

வடமராட்சி பகுதியிலுள்ள ஐந்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றிணைந்து உணவுப் பொருட்களை கப்பலில் எடுத்து வருவதற்கு செலுத்திய பணம் சுமார் ஒரு கோடி ஒரு லட்சத்து இருபதுயிரம் ரூபா கொழும்பில் முடங்கிக் கிடக்கிறது.

கொழும்பில் கூட்டுப்படை தலைமையகம் கப்பல் மூலம் உணவுப் பொருட்களை வடபகுதிக்கு எடுத்து வருவதற்கு தடை விதித்தமையே இதற்கு காரணமென பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இந்நிலையில் ஏற்கனவே உணவுப் பொருட்களை கொண்டு வருவதற்காக செலுத்தப்பட்ட மேற்படி பணம் அங்கு முடங்கிப் போயிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. -160-சி

# வடக்கு நோக்கி படையினரை நகர விடாது புலிகள் தாக்குதல்

(கொழும்பு)

கிழக்கிலிருந்து படையினரை வடக்கு நோக்கி நகர விடாது புலிகள் தொடர்ந்தும் கிழக்கில் கடும் தாக்குதலை நடாத்தி வருவதாக 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

வடக்கில் பாரிய தாக்குதல்களை நடாத்துவதற்காக பெருமளவு படையினரை கிழக்கிலிருந்து வடக்கு நோக்கி நகர்த்த பாதுகாப்பு தலைமையகம் நடவடிக்கை எடுத்து வருகின்ற போதும் புலிகள் கிழக்கில் தொடர்ச்சியாக நடாத்தி வரும் தாக்குதல் அந்த முயற்சிக்கு பெரும் தடங்கலாக இருந்துவருகிறதாம்.

வடக்கு நோக்கி படையினர் நகர்வதை தடுப்பதும் வடக்கில் பாரிய தாக்குதல் நடாத்தும் படையினரின் திட்டத்தை முறியடிப்பதுமே புலிகளின் நோக்கமாயிருப்பதாகவும் இராணுவ வட்டாரங்கள் கருதுவதாகவும் 'ஐலண்ட்' தெரிவித்துள்ளது. -சி

# நிறுவுனர் தினம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் நிறுவுனர் நாளும், தமிழ் தினமும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு நடைபெறும். பிரதமவிருந்தினராக வலயம்-1 இன் பிரதிகல்விப் பணிப்பாளர் அ. துரைசிங்கம் கலந்து கொள்வார். 170 சி

# குடியிருப்புக்களை நோக்கி படையினர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு இராணுவமுகாமிலிருந்து இராணுவத்தினர் நேற்று காலை 9 மணியளவில் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இராணுவத்தினர் ஏவிய ஷெல் ஒன்று பாரிய சத்தத்துடன் கொட்டடிப் பகுதியில் வீழ்ந்து வெடித்தது.

இதேவேளை நேற்றுக் காலை 8-50 மணியளவில் காரைநகர் கடற்பகுதியிலிருந்து கடற்படையினரால் மூளாய், பொன்னுலை ஆகிய பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

காரைநகர் முகாமில் இருந்து படையினர் நேற்று காலை ஷெல்தாக்குதலை மேற்கொண்டர். -170-59-சி

## பூநகரியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலில் வீரவேங்கை வீரியன் (கோபாலபிள்ளை நிரஞ்சன்- கொக்குவில் மேற்கு], வீரவேங்கை பூவேந்தன் [சீனியர் உதயகுமார்- கோப்பாய் தெற்கு], வீரவேங்கை இளம்பரதி [நல்லையா சந்திரமோகன்- முள்ளியவளை] ஆகிய போராளிகள் வீரச்சாவடைந்தார்கள். ம-வி-சி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [நிறுவனத்]தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, [68]ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.